www.ecourtsindia.com

**<u>D E P O S I T I O N   O F   W I T N E S S</u>**
**<u>( Chapter XXIII Code of Criminal Procedure)</u>**
**<u>IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT</u>**
**<u>CHENGALPATTU</u>**

## <u>SC No. 102/2024</u>

| | |
|---|---|
| Ranking of Witness | : **PW. 1** |
| Name | :திரு. சரண்சிங் |
| Husband's/Father's Name | : திரு்.வெள்ளியான் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் வாயலூார் பெரியகாலணியில் வசிக்கிறேன். நான் திருக்கழுக்குன்றம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். பட்டியல் சாட்சி 2 முதல் 4 வரைஉள்ளவர்களைத் தெரியும். ஆஜர் எதிரிகளையும் தெரியும். வாயலூார் நேதாஜி தெருவில் இருந்த எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் ஆஜர் எதிரிகள்வசிக்கிறார்கள. ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் வீட்டு மனை சம்மந்தமாக தகறாறு ஏற்ப்பட்டு அது குறித்து முன்விரோதம் இருந்து வருகிறது. கடந்த 24.9.2014 ஆம் தேதி மாலை சுமார் 6.40 மணிக்கு எங்கள் வீட்டில் பின்புறம் இருந்த வைக்கோல் போரில் ஆஜர் எதிரிகளில் ஏழுமலை என்பவருடைய மாடு மேய்ந்து கொண்டிருந்தது. இதை பார்த்த என் அப்பா வெள்ளியான் மாட்டை ஓட்டிவிட்டார். இதைப் பார்த்த ஏழுமலை மகன் வசிகரன் என்பவர் ஏற்கனவே இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்து கொண்டு என் அப்பா வெள்ளியானைப் பார்த்து ஓத்தா தேவடியாபையா ஏன்டா என் மாட்டை அடித்தாய் என்று பேசிக் கொண்டே என்அப்பா வெள்ளியான் கண்ணத்தில் ஆஜர்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-1.pdf

எதிரிகளில் வசிகரன் என்பவர் கையால் ஓங்கி அடித்தார். இதை கண்ட நான் வசீகரனிடம் ஏன் என் அப்பாவை அடித்தாய் என்று கேட்டு கொண்டு என் அப்பாவை என்னுடைய வீட்டிற்கு அழைத்த சென்று விட்டேன். அப்போது என்னுடைய நண்பர் அன்பழகன் என்னைப் பார்ப்பதற்காக அங்கு வந்திருந்தார். நான் அவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் ஏழுமலை, வசீகரன், பானு, மாலா ஆகியோர் அத்துமீறி எங்கள் வீட்டிற்குள் வந்தார்கள். அவர்களில் ஏழுமலை என்பவர் கையில் இரும்பு பைப்பையும், பானு என்பவர் கையில் செங்கலையும், மாலா கையில்தடியையும் எடுத்துக் கொண்டு அத்துமீறி எங்கள் வீட்டிற்குள் நுழைந்தார்கள். பின்பு அவர்களில் வசீகரன் என்பவர் அவர் வைத்திருந்த துண்டை என் கழுத்தில் போட்டு இறுக்கி கொண்டே தேவடியா பையா உன்னை ஒழித்தால் தான் எங்களுக்கு நிம்மதி என்று என்னை வெளியே இழுத்துவந்தார். உடனே வசீகரன் துண்டால் என் கழுத்தை இறுக்கிகொண்டே அவர் அப்பாவிடம் இருந்த இரும்பு பைப்பை வாங்கி ஒழிந்துபோடா நாயே என்று ஓங்கி என் தலையில் அடித்தார். நான் சற்று விலகியதால், அந்த அடி என் இடது கண்ணில் பட்டதில் என் இடது கண் வீங்கி கண் முடிவிட்டது. மேலும் பலத்த காயம் ஏற்ப்பட்டது. துண்டு போட்ட என் கழுத்தை இறுக்கியதால் எனக்கு பேச முடியாத நிலை ஏற்ப்படடது. பின்ப, மீண்டும் வசீகரனிடமிருந்து பைப்பை வாங்கிய ஏழுமலை உன்னை ஒழித்தால் தான் நிம்மதி என்று ஒழிந்து போடா என்று கூறி என் முதுகில் அடித்தார். அதனால் எனக்கு முதுகு வலி ஏற்பபட்டு உள்காயம் ஏற்ப்பட்டது. பின்ப, பானு என்பவர் கையில் வைத்திருந்த செங்கல்லால் ஒழிந்துபோடா என்று சொல்லி என் மார்பு மீது அடித்தார். அதனால் எனக்கு மார்பு வலி ஏற்ப்பட்டது. மாலா என்பவர் கையில் வைத்திருந்த தடியால் இவனை தீர்த்து கட்டினால் தான் நமக்கு நிம்மதி என்று கூறிகொண்டே தடியால் ஒழிந்துபோடா என்று தலையில் அடித்தபோது நான் சற்று விலகியதால் அந்த அடி என் வலது காலில் பட்டது. அதனால் வலி ஏற்ப்பட்டது. உள்காயமும் ஏற்ப்பட்டது. அந்த சம்பவத்தை என் அப்பா வெள்ளியான், என் நண்பர் அன்பழகன், கண்ணியப்பன் ஆகியோர் பார்த்தார்கள். பின்பு என் அப்பா சத்தம் போட்டபோது எங்களிடம் வைத்துக் கொண்டால் உன் குடும்பத்தையே காலி செய்துவிடுவேன் என்று மிரட்டினார்கள். அதனால் எனக்கு உயிர் பயம் ஏற்ப்பட்டது. ஏனென்றால் நான் பக்கத்துவீட்டில் வசிப்பதால். இந்த சம்பவத்தை பார்த்த அன்பழகனையும் மிரட்டினார்கள். அவர் ஒதுங்கிநின்றுவிட்டார். பின்பு காயம்பட்ட என்னை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு என் அண்ணன் செல்வதுரை, நண்பர் அன்பழகன், கோபி ஆகியோர் சிகிச்சைக்கு அழைத்து வந்து சேர்த்தார்கள்.அப்போது மறுநாள் 25.9.2014 மருத்துவமனைக்கு வந்த சட்ராஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் நடந்த சம்பத்திற்கு ஒரு புகார் வாக்குமூலம்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-1.pdf

www.ecourtsindia.com

கொடுத்தேன். நான் கொடுத்த புகார்வாக்குமூலம் அ.த.சா.ஆ.1. சம்பவத்தன்று எதிரிகள் ஏழுமலையும், வசீகரனும் என்னை தாக்கிய பைப் இது தான் . அது சா.பொ.1. இதுசம்மந்தமாக என்னை சட்ராஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை 25.9.2014 ம் தேதி விசாரித்தார். பின்பு நான் அடிப்பட்டதிலிருந்து 28.9.2014 வரை செங்கல்பட்டுஅரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். பின்பு 28.9.2014 க்கு பின்பு மேற்படி காயத்திற்காக தனியார் மருத்துவமனையில் வீட்டிலிருந்து சிகிச்சை எடுத்துக் கொண்டேன். எதிரிகளால் ஏற்ப்பட்ட இடது கண் புருவ காயம் மற்றும் அதனால் ஏற்ப்பட்ட வீக்கங்கள் சரியாவதற்கு 2 மாத காலம் தேவைப்பட்டது. என் அப்பா வெள்ளியானுக்கு தற்சமயம் சுமார் 80 வயதாகிவிட்டதால் அவரால் அவருக்கு வயதுமூப்பு காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு தற்சமயம் காது கேட்காத நிலை ஏற்ப்பட்டு நடக்க முடியாத நிலையில் ஆகிவிட்டார். மேலும் சரியான நினைவாற்றலும் இல்லாமல் இருக்கிறார்.

**எதிரித்தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை- இல்லை**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சி படித்துப் பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு 27.02.2025 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்,

Witness Sd/-XXXX

Sd/-Tmt.T.JayashreeM.L.,
தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு,

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-1.pdf

www.ecourtsindia.com